ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2160/33 - 2020 ජනවාරි මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.01.30

*2160/33 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 24/1951* (XV)

### *(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்*

*(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 143 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மஹிந்த அமரவீர,
போக்குவரத்துச் சேவைகள் முகாமைத்துவ அமைச்சர்.

கொழும்பு,
*2020, சனவரி 24.*

ஒழுங்குவிதிகள்

*1.* இவ்வொழுங்குவிதிகள், *2020* ஆம் ஆண்டின் *01* ஆம் இலக்க, மோட்டார் வாகன (மோட்டார் வாகனங்களை மட்டுப்படுத்தல்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* ஆளொருவர், கொழும்பு - ஹங்வெல்ல (AB *010*) வீதியின் தொட்டலங்க சந்தியிலிருந்து கொஹிலவத்த சந்திவரை நீடிக்கின்ற வீதி வழியாக குறித்த சில வாகனங்களைப் பயன்படுத்துவதிலிருந்து மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

1A - PG 4853 — 517 (2020/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. இரண்டாம் ஒழுங்குவிதியினால் மட்டுப்படுத்தப்பட்ட வாகனங்கள் பின்வருமாறாக இருத்தல் வேண்டும் :-

(அ) கொள்கலன்களை இடம்பெயர்க்கின்ற எல்லா வாகனங்கள் ;

(ஆ) தரைமட்டத்திலிருந்து 3.2 மீற்றர்களுக்கு மேற்பட்ட உயரத்தைக் கொண்டுள்ள வேறு வாகனங்கள் ; அத்துடன்

(இ) தரைமட்டத்திலிருந்து 3.2 மீற்றர்களுக்கு மேற்பட்ட உயரத்திலான சுமையைக் கொண்டுள்ள வாகனங்கள்.

4. ஏதேனுமொரு நபரால் 3 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் எல்லைக்குட்படுத்தப்பட்ட வாகனமொன்று கீழே காட்டப்பட்டுள்ள மாற்றுவீதியொன்றினுள் செலுத்த முடியும் :-

(அ) ஒருகொடவத்தை - அம்பத்தலே வீதி (பீ435) வழியாக அல்லது

(ஆ) கொழும்பு - ஹங்வெல்லை வீதியின் (ஏபி010) இடைப்பட்ட இடத்திற்குப் பிரவேசிப்பதற்கான மாற்று வழிகள் :-

(i) ஒருகொடவத்தை - அம்பத்தலே வீதியில் (பீ 435) பிரவேசித்து, கொட்டிகாவத்தை - கொஹிலவத்தை வீதி (பீ 469) வழியாக கொஹிலவத்தை - களனிமுல்லை - அம்பத்தலே வீதி (ஏபீ 010) ஊடாக

மற்றும்

(ii) ஒருகொடவத்தை -அம்பத்தலே வீதியில் (B 435) பிரவேசித்து, அங்கொடை- களனிமுல்லை வீதி (B6 44) வழியாக களனிமுல்லை - அம்பத்தலே வீதி (AB 010) ஊடாக

அமைதல் வேண்டும்.

02-251

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.